தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 06.09.2019**

**விசாரணை நடைபெற்ற இடம்** **நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இ) உதகமண்டலம்.**

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8972/A/2018**

திரு. K. சிவன்
கதவு எண்.108, கூட்செட் ரோடு
ரஹிம்ஷா மில் பின்புறம்
உதகமண்டலம் - 643 001.
நீலகிரி மாவட்டம். . மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்), மாவட்ட காவல்
அலுவலகம், நீலகிரி மாவட்டம்
உதகமண்டலம். பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (06.09.2019) நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இ) உதகமண்டலத்தில் நடத்தப்பட்ட முகாம் விசாரணைக்கு மனுதாரர் K.சிவன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு, C. தம்பிதுரை, பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், (தலைமையிடம்), மாவட்ட காவல் அலுவலகம், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் 05/09/2018 தேதியிட்ட மனுவில், D.O. 588/2016 நாள் 22/04/2016 ல்கண்ட மாவட்ட ஆணையின்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. K. ரவி அவர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. L. கதிர்வேல் அவர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்த ஆணையில் 01/04/2000 முதல் 31/05/2013 வரையிலான காலத்திற்கு நிலுவை தொகை (arrears of pay and allowances) தனியாக வழங்கப்படும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது

என்றும் தெரிவித்து, அது சம்பந்தமாக மாவட்ட ஆணை எண். 588/2016 ல் குறிப்பிட்டுள்ளபடி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. K. ரவி அவர்களுக்கு எவ்வளவு நிலுவை தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதையும், எந்த ஆணையின்படி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் கேட்டும், ஆணை எண்.709/2016 ல் குறிப்பிட்டுள்ள சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. L. ராஜன், திரு. B. ராஜேந்திரன், திரு. S. சம்பத், திரு. M. மொய்தீன், திரு. O.M. நாராயணன் மற்றும் திரு. B. சுப்ரமணி ஆகியோர்களுக்கு ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நிலுவை தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற தகவலையும் எந்த ஆணையின்படி நிலுவை தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற தகவலையும் கேட்டும், இதுபோன்ற தகவல்கள் / நகல்களை 1 முதல் 3 இனங்களில் கேட்டு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்), உதகமண்டலம் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். இதுகுறித்து பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அவர்கள் மனுதாரருக்கு 03/10/2018 தேதியிட்டு அனுப்பிய கடிதத்துடன், நேர்முக உதவியாளர் (நிர்வாகம்), மாவட்ட காவல் அலுவலகம், நீலகிரி மாவட்டம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பதிலினை இணைத்து அனுப்பியுள்ளார். அதில், மனுதாரர் 1 முதல் 3 இனங்களில் கேட்டுள்ள தகவல்கள் தனிப்பட்ட நபரின் சம்பள நிலுவை குறித்த ரகசியமான தகவல் என்பதால் பிரிவு 8 (1) (j) ன்படி மூன்றாம் நபருக்கு வழங்க இயலாது என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. திருப்தியடையாத மனுதாரர் பிரிவு 19 (1)-ன்கீழ் 20/10/2018 தேதியிட்டு முதல் மேல் முறையீட்டு மனுவை காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பி, தான் கோரிய தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், சட்டப்படி தவறான பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, சரியான, முழுமையான தசகவல்களை வழங்கிடுமாறு கேட்டுள்ளார். அதன்பிறகும், தான் கோரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர் பிரிவு 19 (3)-ன்கீழ் 27/11/2018 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை இவ்வாணையத்திற்கு அனுப்பி, தான் கோரிய தகவல்கள் தனக்கு பொது அதிகார அமைப்பால் அளிக்கப்படவில்லை என்றும், தவறான பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, சரியான, முழுமையான தகவல்களைப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளார்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் 05/09/2018 தேதியிட்ட தனது தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவில் தான் கோரிய தகவல்கள் தனக்கு நாளது வரையில் வழங்கப்படவில்லை என்றும், சட்டப்படி தவறான பதில் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, சரியான, முழுமையான தகவல்களைத் தனக்குப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார். விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், 05/09/2018 தேதியிட்ட மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு குறித்து 03/10/2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக உரிய பதில் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது என்றும், தகவல் பெறும் உரிமை சட்டம், 2005 பிரிவு 8 (1) (j) ல் ஊதியம் மற்றும் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படும் விவரங்கள் தனிநபர் குறித்த தகவல்களாகும் என வரையறுக்கப்பட்டு, இது குறித்து வழக்கு எண்.30622/SCIC/2013 நாள் 13/11/2013-ல் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும், சட்டப்படி உரிய பதில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, தனது எழுத்துமூல பதிலை சமர்ப்பித்தார்.

4. மனுதாரர் 05/09/2018 தேதியிட்ட மனுவில், D.O. 588/2016 நாள் 22/04/2016 ல்கண்ட மாவட்ட ஆணையின்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. K. ரவி அவர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. L. கதிர்வேல் அவர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்த ஆணையில் 01/04/2000 முதல் 31/05/2013 வரையிலான காலத்திற்கு நிலுவை தொகை (arrears of pay and allowances) தனியாக வழங்கப்படும்

என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, அது சம்பந்தமாக மாவட்ட ஆணை எண். 588/2016 ல் குறிப்பிட்டுள்ளபடி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. K. ரவி அவர்களுக்கு எவ்வளவு நிலுவை தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதையும், எந்த ஆணையின்படி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் கேட்டும், ஆணை எண்.709/2016 ல் குறிப்பிட்டுள்ள சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. L. ராஜன், திரு. B. ராஜேந்திரன், திரு. S. சம்பத், திரு. M. மொய்தீன், திரு. O.M. நாராயணன் மற்றும் திரு. B. சுப்ரமணி ஆகியோர்களுக்கு ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நிலுவை தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற தகவலையும் எந்த ஆணையின்படி நிலுவை தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற தகவலையும் கேட்டு விண்ணப்பித்துள்ளார் என்பதைக் காண முடிகிறது. மேற்சொன்ன தகவல்களைப் பார்வையிடுகையில், மனுதாரர் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. K. ரவி, திரு. L. ராஜன், திரு. B. ராஜேந்திரன், திரு. S. சம்பத், திரு. M. மொய்தீன், திரு. O.M. நாராயணன் மற்றும் திரு. B. சுப்ரமணி ஆகியோர்களுக்கு வழங்கப்பட்ட பணி சம்பந்தப்பட்ட நிலுவைத் தொகை குறித்த விவரங்களைக் கேட்டுள்ளார் என்பதை நன்கு அறிய முடிகிறது. இவை அனைத்தும் மூன்றாம் தரப்பினரான சம்பந்தப்பட்ட சிறப்பு உதவி ஆய்வாளர்களின் பணி தொடர்பான நிலுவைத்தொகை குறித்த தனிப்பட்ட தகவல்களாகும். இவை போன்ற பணியாளர்களின் பணி, சம்பளம் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட தகவல்களைப் பரந்த பொதுநலன் இருந்தாலன்றி வழங்கத் தேவையில்லை என்று மாண்பமை உச்சநீதிமன்றம் **GIRISH RAMACHANDRA DESHPANDE -Vs- CENTRAL INFORMATION COMMISSIONER & Ors {S.L.P. (Civil) No.27734 of 2012}** என்ற வழக்கில் அளித்த தீர்ப்பில் தெளிவாகத் தெரிவித்துள்ளது. இதே வழக்கின் தீர்ப்பை சுட்டிக்காட்டி பொதுத் தகவல் அலுவலரால் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு எண்.30622/SCIC/2013 நாள் 13/11/2013-ல் இவ்வாணையம் ஆணை பிறப்பித்துள்ளது.

5. எனவே, மனுதாரர் கோரிய தகவல்கள் மூன்றாம் தரப்பினரின் தனிப்பட்ட தகவல்கள் என்பதால், பிரிவு 8 (1) (j) ன்படி மூன்றாம் நபருக்கு வழங்க இயலாது என்று பொதுத் தகவல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ள பதில் சட்டப்படி சரியானதே என்று ஆணையம் முடிவு செய்து ஏற்றுக்கொள்கிறது. **இந்நிலையில், இவ்வழக்கில் மேலும் விசாரிக்க ஏதுமில்லை என்று முடிவு செய்து, இவ்வழக்கு விசாரணையை ஆணையம் இத்துடன் முடித்துக்கொள்கிறது.**

**ஒம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8972/A/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்), மாவட்ட காவல் அலுவலகம்
நீலகிரி மாவட்டம் உதகமண்டலம்.

**<u>மனுதாரர்</u>**
திரு. K. சிவன்
கதவு எண்.108, கூட்செட் ரோடு
ரஹிம்ஷா மில் பின்புறம்
உதகமண்டலம் - 643 001.
நீலகிரி மாவட்டம்.

*RS/PS 10.09.2019*